தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 சனவரி 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. பெரியண்ணன், ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை, ஆர். ராகவ மேனன் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரம்பலூர், ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957-இலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. பெரியண்ணன் அவர்கள் 16—12—1971-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தென்காசி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1952-லிருந்து 1957-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 9—1—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பாலக்காடு கிராமப்புற பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1946-இலிருந்து 1952-ஆம் ஆண்டுவரை உறுப்பினராகவும், மற்றும் 1946-லிருந்து 1947-ஆம் ஆண்டுவரை திரு. பிரகாசம் அவர்களுடைய அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராகவும் இருந்த திரு. ஆர். ராகவ மேனன் அவர்கள் 20—1—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும், இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(அவையினர் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மருத்துவக் கல்லூரியில் பல்நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி

*1 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரியில் பல் வைத்தியப் பிரிவு, கட்டாய உதவிச் சம்பளப் பயிற்சி திட்டத்தின் கீழ், பல்நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி ஒன்றை அளிக்கின்றதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியில் உள்ள பல் வைத்தியப் பிரிவில் பல் நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி அளிக்கும் திட்டம் இல்லாமலிருந்தாலும், தமிழகத்தில் வேறு எந்த மருத்துவக் கல்லூரியிலாவது அப்படிப்பட்ட திட்டம் நடைமுறையில் இருக்கிறதா ? வேறு மருத்துவக் கல்லூரிகளில் நடைமுறையில் இருந்தால், பிறகு அங்கும் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பல் நல உதவியாளர்களுக்கென்று இந்தப் பயிற்சி சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது. இதிலே பயிற்சி பெறுகிற மாணவர்கள் ஓராண்டுக்கு ஆறு பேர்கள்தான். அப்படிச் சில ஆண்டுகளாகப் பயிற்சி பெற்ற அனைவரும் கூட இன்னும் வேலையில் சேர்ந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. 'மெட்ராஸ் மெடிகல் காலேஜ்' என்று வழங்கப்படுகிற சென்னை மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றிருக்கின்ற அந்த மாணவர்களுடைய எண்ணிக்கையே தேவைக்குப் போதுமானதாக இருக்கிறது. மேலும், அவர்களுக்கு மாதமொன்றுக்கு 50 ரூபாய் வீதம் உதவித் தொகையும் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, வேறு பல இடங்களில் விரிவாக்கப்படுவது இயலாததொன்றாகும்.

திரு. என். கிட்டப்பா : பல் வைத்தியம் பார்க்கக்கூடிய டாக்டர்களை, நமது மாநிலத்தில் எல்லாத் தாலுக்காத் தலைநகரங்களிலும் உள்ள அரசு மருத்துவ மனைகளில் நியமிப்பது குறித்து அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது இந்தக் கேள்வியிலிருந்து எழுவதல்ல. உறுப்பினரவர்கள் டாக்டர்களைப்பற்றிக் கேள்வி கேட்கிறார். ஆனால், இது பல் நல உதவியாளர்களை (ஹைஜினிஸ்ட்ஸ்) பற்றியது. இருந்தாலும், அப்படி தாலுக்கா மருத்துவ மனைகளில் அமைப்பதற்கான ஒரு பொது நோக்கம் இருக்கிறது. ஓராண்டுக்கு இத்தனை தாலுக்கா மருத்துவ மனைகளில்தான் ஏற்படுத்த முடியும் என்று திட்டம் இருக்கிறது. அதுபற்றி வேறு விதமான பரிசீலனையும் இருக்கிறது. அது முடிந்து அதற்கேற்ப அவர்கள் குறிப்பிடுகிற ஊர்களிலே அது தொடங்கப்படும்.

கோவை அரசு தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு

*2 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் தலைமை மருத்துவமனையில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) ஆம் எனில் இக்குறையை நீக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) குடி தண்ணீர் தட்டுப்பாடு ஓரளவு இருந்தாலும் குறிப்பிட்ட நேரங்களில் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றைய தேவைகளுக்குச் சில மணி நேரங்